# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 ஆனி 26 திங்கட்கிழமை 11.08.2025 கதிர் 282



யாழ் மண்ணிலிருந்து இணைய வெளிக்கு -
Yarl Muttram
Youtube Channel






## முத்துஐயன்கட்டு இளைஞரின் சடலம் பொலிஸாரின் பாதுகாப்புடன் அடக்கம்

### சுமந்திரன் தலைமையில் தமிழரசுக் கட்சி அஞ்சலி





முல்லைத்தீவு, ஓக. 11

முல்லைத்தீவு மாவட்டம், முத்துஐயன்கட்டுப் பகுதியில் இராணுவத்தால் தாக்கப்பட்டு உயிரிழந்த இளம் குடும்பஸ்தரான எதிர்மன்னசிங்கம்

7

# ஹர்த்தால் சொல்லும் செய்தியை அநுர கவனத்தில் எடுக்க வேண்டும்

## ஆதரவு தெரிவிக்கும் அறிக்கையில் மனோ சுட்டிக்காட்டு



கொழும்பு, ஓக. 11

"முல்லைத்தீவு, முத்துஐயன்கட்டு இராணுவ முகாமுக்குச் சிப்பாய்களால் அழைத்துச் செல்லப்பட்டு சித்திரவதைக்குள்ளாகிய இளைஞர்களில் ஒருவர், முத்துஐயன்கட்டுக் குளத்தில் இருந்து சடலமாக மீட்கப்பட்ட சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டு இலங்கைத் தமிழரசுக் கட்சி, "நீதியான விசாரணை", "வடக்கு - கிழக்கில் இருந்து மேலதிக இராணுவம் குறைப்பு" ஆகிய கோரிக்கைகளை முன்வைத்து எதிர்வரும் வெள்ளிக்கிழமை வடக்கு, கிழக்கில் நடத்தும் முழு அடைப்பு என்ற ஹர்த்தாலை நாம் ஆதரிக்கின்றோம். ஹர்த்தால் சொல்லும் செய்தியை ஜனாதிபதி - பாதுகாப்பு அமைச்சர் அநுரகுமார திஸாநாயக்க கவனத்தில் எடுக்க வேண்டும்." - என்று தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பி. தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

"ஐந்து தமிழ் இளைஞர்கள், கடந்த 7ஆம் திகதி முத்துஐயன்கட்டு இராணுவ முகாமுக்குச் சிப்பாய்களால் அழைத்துச்செல்லப்பட்டுள்ளனர். பின்னர் அவர்கள் அந்த முகாமில் இருந்து தப்பிச் சென்றதாகக் கூறப்படுகின்றது. தப்பிச் சென்றவர்களில் ஒருவரான, கபில்ராஜ், 9 ஆம் திகதி முத்துஐயன்கட்டுக் குளத்தில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். தப்பிச்சென்ற ஏனைய நால்வர், தம்மை இராணுவத்தினர் கடுமையாகத் தாக்கி சித்திரவதை செய்ததாகக் குற்றம் சாட்டியுள்ளனர். ஆகவே, என்ன நடந்தது என்பதை ஊகிப்பது கடினமானது அல்ல.


இந்தச் சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டு இலங்கைத் தமிழரசுக் கட்சி, "நீதியான விசாரணை", "வடக்கு - கிழக்கில் இருந்து மேலதிக இராணுவம் குறைப்பு" ஆகிய கோரிக்கைகளை முன்வைத்து எதிர்வரும் வெள்ளிக்கிழமை நடத்தும் முழு அடைப்பு என்ற ஹர்த்தாலை நாம் ஆதரிக்கின்றோம்.

ஜனாதிபதி - பாதுகாப்பு அமைச்சர் அநுரகுமார திஸா நாயக்க, இது தொடர்பில் உடன் விசாரணை, தண்டனைக்கு உரிய சட்ட நடவடிக்கை, ஆகியவற்றை ஏற்பாடு செய்ய வேண்டும். அத்துடன் இதை அடிப்படையாகக் கொண்டு, வடக்கு, கிழக்கின் மேலதிக இராணுவப்பிரசன்னத்தை உடன் குறைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

"இராணுவப் பிரசன்னம் குறைப்பு"

7

## நான்கு வாகனங்கள் மோதி விபத்து ஒருவர் மரணம்! நால்வர் படுகாயம்!!



தென்மராட்சி, ஓக. 11

யாழ்ப்பாணம், தென்மராட்சியில் நான்கு வாகனங்கள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளானதில் ஆண் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் நால்வர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் - கண்டி நெடுஞ்சாலையில் ஆசைப்பிள்ளை ஏற்றம் பகுதியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இரவு இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

7

## ஹர்த்தாலுக்கு ஜீவனும் ஆதரவு



நுவரெலியா, ஓக. 11

வடக்கு, கிழக்கில் எதிர்வரும் 15 ஆம் திகதி இடம்பெறவுள்ள ஹர்த்தாலுக்கு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமான் முழு ஆதரவு தெரிவித்துள்ளார்.

"முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான் - முத்துஐயன்கட்டுப்

7

## மட்டக்களப்பில் ஆணின் சடலம்



மட்டக்களப்பு, ஓக. 11

மட்டக்களப்பு, கொக்குவில் - சவுக்கடி பகுதியில் ஆண் ஒருவரின் சடலம் இன்று மீட்கப்பட்டுள்ளது.

ஏறாவூர் பகுதியிலுள்ள உறவினரது தங்க ஆபரண

7

## கத்திக்குத்தில் ஒருவர் மரணம்! நால்வர் வைத்தியசாலையில்!!

### புங்குடுதீவில் நேற்று இரவு பயங்கரம்

புங்குடுதீவு, ஓக. 11

யாழ். புங்குடுதீவில் நேற்று ஞாயிற்றுக கிழமை இரவு இடம்பெற்ற கத்திக்குத்துத் தாக்குதலில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் இரு பெண்கள் உள்ளிட்ட

7



# யானைகளைப் பாதுகாக்க சூரிய சக்தி கமரா திட்டம்



கொழும்பு, ஒக 11

காட்டு யானைகள் ரயில்களில்மோதுவதைத் தடுக்க, முக்கிய ரயில் பாதைகளில் பொருத்தப்பட்டுள்ள சிசிடிவி கமரா அமைப்பை இலங்கை ரயில்வே திணைக்களம் ஆய்வு செய்தது.

நேற்று நடத்தப்பட்ட ஆய்வுச் சுற்றுப்பயணத்தில் ரயில்வே பொது முகாமையாளர் தம்மிக ஜெயசுந்தர, திணைக்களத்தின் மூத்த அதிகாரிகளுடன் கலந்து கொண்டார்.

யானைகள் அடிக்கடி கடக்கும் அபன்பொல-காசிகோட் ரயில் சுரங்கப்பாதைக்கு அருகிலும், யானைகள்-ரயில் மோதல்களுக்கு பெயர் பெற்ற கல் ஓயா மற்றும் மின்னேரியா போன்ற பகுதிகளிலும் இந்த கமரா அமைப்பு சுமார் இரண்டு மாதங்களுக்கு முன்பு அமைக்கப்பட்டது.

இந்த அமைப்பு 24 மணி நேரமும் இயங்குகிறது மற்றும் சூரிய சக்தி பேனல்களால் இயக்கப்படுகிறது.

கமராக்களில் பதிவான காட்சிகளின் அடிப்படையில், தண்டவாளங்களுக்கு அருகில் யானைகள் கண்டறியப்படும்போது, அனுராதபுரத்தில் உள்ள முக்கிய ரயில்வே செயல்பாட்டு மையத்திற்கு சமிக்ஞைகளை அனுப்ப ஜிபிஎஸ் அடிப்படையிலான எச்சரிக்கை அமைப்பு செயல்படுத்தப்பட்டுள்ளது.

பின்னர் தண்டவாளங்களில் யானைகள் இருப்பது குறித்து ரயில் ஓட்டுநர்களுக்கு நிகழ்நேரத்தில் தெரிவிக்கப்படும், இதனால் அவர்கள் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்க முடியும்.

இந்த விஜயத்தின் போது, ரயில்வே பொது முகாமையாளர் தம்மிக ஜெயசுந்தர கூறுகையில், ஒரு கமராவை நிறுவுவதற்கு அண்ணளவாக ரூ. 20,000 செலவாகும். நன்கொடையாளர்கள் பங்களிக்கத் தயாராக இருந்தால், ரயில் பாதைகளில் யானைகள் நடமாட்டம் அதிகமாக உள்ள பகுதிகளில் கூடுதல் கேமராக்களை நிறுவுவதன் மூலம் இந்த அமைப்பை விரிவுபடுத்த முடியும் என்று அவர் மேலும் கூறினார். (ஐ)

# நம்பிக்கையில்லாப் பிரேரணையை சமர்ப்பிப்பதில் தாமதம்

கொழும்பு, ஒக 11

சபாநாயகர் ஜகத் விக்ரமரத்னவின் வருகையின் காரணமாக, துணைப்பாதுகாப்பு அமைச்சர் அருண ஜெயசேகராவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை முறையாக சமர்ப்பிப்பது தாமதமாகியுள்ளதாக பாராளுமன்ற வட்டாரங்கள் இன்று தெரிவித்தன.

சபாநாயகர் விக்ரமரத்ன தற்போது கொழும்பிற்கு வெளியே உத்தியோகபூர்வ பணிகளில் ஈடுபட்டுள்ளதால், திட்டமிடப்பட்ட கையளிப்பு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இருப்பினும், எதிர்க்கட்சித் தலைவர் அலுவலக வட்டாரங்கள், இந்தப் பிரேரணை நாளை நண்பகலில் சமர்ப்பிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுவதாக உறுதிப்படுத்தின. (ஐ)

# பிரபல பத்திரிகைக்கான' விருதை வென்ற 'டெய்லி மிரர்'





கொழும்பு, ஒக 11

'லண்டன் வணிக ஆலோசனை நிறுவனம்' ஏற்பாடு செய்த உலக வணிக சிறப்பு விருது விழாவில் எமது சகோதர பத்திரிகைகளான 'டெய்லி மிரர்' **(Daily Mirror)** 'இலங்கையின் மிக பிரபலமான ஆங்கில பத்திரிகைக்கான' விருது , 'டெய்லி எஃப்டி' **(Daily FT )**பத்திரிகை 'இலங்கையில் மிக பிரபலமான வணிக பத்திரிகை' மற்றும் 'லங்காதீப' இலங்கையின் மிக பிரபலமான பத்திரிகைக்கான விருதையும் வென்றது.

இந்த விருது விழா முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் கொழும்பு, பண்டாரநாயக்க நினைவு சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் ஞாயிற்றுக்கிழமை (10) நடைபெற்றது.

சிரேஷ்ட கட்டுரையாளர் மற்றும் பத்திரிகையாளருமான மோகன்ராஜ் மடவல, 'டெய்லி மிரர்' பத்திரிகையின் தலைமை ஆசிரியர் ஜமீலா /ஹுசைன் மற்றும் 'டெய்லி எஃப்டி' பத்திரிகையின் துணை ஆசிரியர் சாருமினி டி சில்வா ஆகியோருக்கு குறித்த விருதுகளை வழங்கினார்.

விஜய பத்திரிகை நிறுவனத்தின் விளம்பர பிரிவு தலைவர் இந்திக ஜயமஹா மற்றும் இங்கிலாந்தில் உள்ள எல்பிசி குழு நிறுவனங்கள் மற்றும் கேடக் நிறுவனத்தை பிரதிநிதித்துவப்படுத்திய மரி வதீர் ஆகியோர் இந்த நிகழ்வில் பங்கேற்றனர். (ஐ)



# கருநிலம் பாதுகாப்பு







மன்னார், ஒக 11

மன்னாரில் பல்தேசிய நிறுவனங்களின் இல்மனைட் கனிம மணல் சுரண்டலை கண்டித்து, இளைஞர்கள் ஒன்றிணைந்து ஏற்பாடு செய்த விழிப்புணர்வு போராட்டம் ஞாயிற்றுக்கிழமை (10) அன்று மாலை யாழ்ப்பாணம் பண்ணைபகுதியில் இடம்பெற்றது.

மன்னார் மாவட்டத்தின் இயற்கை வளங்களில் ஒன்றாக மணல் உள்ளது. இந்த மணல், இல்மனைட் கனிமத்தை கொண்டிருப்பதால் உலகளவில் பெரும் கேள்வி உள்ளது. கடந்த சில ஆண்டுகளுக்கும் மேலாக அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த பல்தேசிய நிறுவனம் ஒன்று இல்மனைட் மணல் அகழ்வு முயற்சித்து வருகிறது. இந்த அகழ்வைத் தடுக்கவும், மக்களின் பூர்வீக நிலங்களையும் இருப்பையும் பாதுகாக்கவும் 'கருநிலம் பாதுகாப்பு' என்ற கருப்பொருளுடன் மக்களை விழிப்புணர்வு செய்யும் போராட்டத்தை முன்னெடுக்க இளையோர் நடவடிக்கைகளை முன்னெடுத்த நிலையில் குறித்த விழிப்புணர்வு போராட்டம் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது.

இதன் போது கலந்து கொண்ட அரசியல் பிரதிநிதிகள், இளையோர் என பலரும் கலந்து கொண்டதுடன் பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் விழிப்புணர்வு பேரணி ஒன்றையும் முன்னெடுத்தனர். (ஐ)

## முத்துஐயன்கட்டுக் கொலை: சுமந்திரன் கண்டனம்



முல்லைத்தீவு, முத்துஐயன்கட்டுப் பகுதியில் தமிழ் இளைஞர் ஒருவர் இராணுவத்தினரால் தாக்கப்பட்டுக்கொல்லப்பட்ட சம்பவத்தை வன்மையாகக் கண்டிக்கின்றோம் என்றும் இது தொடர்பில் பொலிஸார் எவ்வித தலையீடுகளுமின்றி முறையான விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச்செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பொன்றின்போது அவர் தெரிவித்தார். இதன்போது அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

முல்லைத்தீவு, முத்துஐயன்கட்டுக் குளத்தில் கடந்த சனிக்கிழமை காலை தமிழ் இளைஞர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது. கடந்த வியாழக்கிழமை ஐந்து பேர் முத்துஐயன்கட்டு இராணுவ முகாமுக்கு இராணுவத்தினரால் அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர். நால்வர் முகாமில் இருந்து தப்பித்துச் சென்றுள்ளார்கள். ஒருவர் காணாமல்போயிருந்தார். அவரின் சடலம்தான் முத்துஐயன்கட்டுக் குளத்தில் இருந்து பின்னர் மீட்கப்பட்டுள்ளது. முகாமுக்குள்வைத்து இராணுவத்தினர் தம்மை மிக மோசமாகத் தாக்கினார்கள் என்று தப்பித்து வந்தவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

இராணுவத்தினரால் தாக்கப்பட்டுக் கொல்லப்பட்ட இளைஞரின் சடலம் குளத்தில் வீசப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் உடன் விசாரணை செய்யப்பட வேண்டும்எனவும், பொறுப்பானவர்கள் கைது செய்யப்பட்டு சட்டத்தின் முன் முன்னிலைப்படுத்தப்பட வேண்டும் என்று வலியுறுத்தியிருந்தோம்.

இவ்வாறான நிலையில் சனிக்கிழமை மாலை ஒட்டுசுட்டான் பொலிஸாரினால் ஒருசில இராணுவத்தினர் கைது செய்யப்பட்டுள்ளார்கள். அதில் மூவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்கள்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் எவ்வித தலையீடுகளுமின்றி முறையான விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும். பிரதான விடயம் யாதெனில் ஒரு சம்பவம் இடம்பெற்றதன் பின்னர் அது தொடர்பில் விசாரிக்கப்பட வேண்டும், குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும் என்று சொல்லுவது பிரயோசனமற்றது.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இராணுவத்தினர் அந்தப் பிரதேச மக்களுக்கு எதிராகச் செயற்படுகின்றார்கள். மக்கள் மீது வன்முறைகளைக் கட்டவிழ்த்து விடுகின்றார்கள். இதற்குச் செம்மணி ஒரு சிறந்த எடுத்துக்காட்டு என்றார் (ஐ)

## இராமேஸ்வரம் மீனவர்கள் தொடர் போராட்டம்



இலங்கை சிறையில் அடைக்கப்பட்டுள்ள மீனவர்களை விடுதலை செய்ய வலியுறுத்தி இராமேஸ்வரம் மீனவர்கள் தொடர் போராட்டங்களை அறிவித்துள்ளனர்.

இராமேசுவரத்திலிருந்து சனிக்கிழமை காலை கடலுக்குச் சென்ற விசைப்படகு மன்னார் வடக்கு கடல் பகுதியில் மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது, ரோந்து வந்த இலங்கை கடற்படையினர் எல்லை தாண்டி மீன்பிடித்தனர் என கூறி சனிக்கிழமை பிற்பகல் படகை சிறைபிடித்தனர்.

படகிலிருந்த 7 மீனவர்களை மீது, எல்லை தாண்டி மீன்பிடித்தல், தடை செய்யப்பட்ட வலைகளை பயன்படுத்துதல் உள்ளிட்ட பிரிவுகளின் கீழ் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டு, மன்னார் நீதிபதி வீட்டில் நேற்று ஆஜர்படுத்தப்பட்டனர்.

வழக்கை விசாரித்த நீதிபதி மீனவர்கள் 07 பேர்களையும், ஒகஸ்ட் 21 ஆம் திகதி வரை நீதிமன்ற காவலில் வைக்க உத்தரவிட்டார். தொடர்ந்து மீனவர்கள் வவுனியா சிறையில் அடைக்கப்பட்டனர்.

இதனை தொடர்ந்து இராமேஸ்வரம் மீன்பிடித் துறைமுகம்அருகே மீனவர்களின்அவசர ஆலோசனை கூட்டம் மீனவ பிரதிநிதி சேசுராஜா தலைமையில் நடைபெற்றது.

இந்த கூட்டத்தில் கடந்த 50 நாள்களில் 64 தமிழக மீனவர்கள் கைது செய்யப்பட்டு இலங்கை சிறையில் நீதிமன்ற காவலில் அடைக்கப்பட்டுள்ளனர். ஆறு மாதம், ஒரு ஆண்டு, இரண்டு ஆண்டுகள் சிறை தண்டனை பெற்று 24 மீனவர்கள் தண்டனை கைதிகளாக உள்ளனர். இலங்கை சிறையில் அடைக்கப்பட்டுள்ள 88 மீனவர்களை விடுதலை செய்ய வலியுறுத்தி இன்று திங்கள் கிழமை முதல் வேலை நிறுத்தப் போராட்டம் நடத்துவது, ஒகஸ்ட் 15 சுதந்திர தினத்தன்று உண்ணாவிரதப் போராட்டம் நடத்துவது, ஒகஸ்ட் 19 ஆம் திகதி இராமேஸ்வரத்தில் ரயில் மறியல் போராட்டம் நடத்துவது உள்ளிட்ட தொடர் போராட்டங்களை அறிவித்துள்ளனர்.

மேலும், நீண்ட காலமாக இருந்து வரும் இந்திய -இலங்கை மீனவர் பிரச்சினைக்கு நிரந்திர தீர்வு காணவும், கச்சதீவு பகுதியில் மீன்பிடிக்கும் உரிமையை பெற்ற தர மத்திய, மாநில அரசுகள் வலியுறுத்தி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. (ஐ).

## 'எமது நிலம் எமக்கு வேண்டும்'– மன்னாரில் முன்னெடுக்கப்படவுள்ள பாரிய போராட்டம்!

'எமது நிலம் எமக்கு வேண்டும்' எனும் தொனிப்பொருளில் எதிர்வரும் 14 ஆம் திகதி மன்னாரில் முன்னெடுக்கப்படவுள்ள போராட்டத்துக்கு நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் அழைப்பு விடுத்துள்ளார். இன்று (11) காலை இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

மன்னார் மக்களின் வாழ்வை பாதிக்கும் வகையில் முன்னெடுக்கப்படும் காற்றாலை மின் கோபுர திட்டம் மற்றும் கணிய மணல் அகழ்வுக்கு எதிராக பாரிய போராட்டம் ஒன்றை முன்னெடுப்பதற்கு வடக்கு – கிழக்கில் உள்ள அரசியல் பிரதிநிதிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் மேலும் தெரிவிக்கையில், மன்னாரில் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற 2 ஆம் கட்ட காற்றாலை கோபுரம் அமைக்கும் திட்டம் மற்றும் கணிய மணல் அகழ்வுக்கு எதிராக போராட்டம் ஒன்றை முன்னெடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் 14ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணி முதல் மன்னார் பசார் பகுதியில் முன்னெடுக்கப்படவுள்ள போராட்டத்தில் கலந்து கொள்ள வடக்கு, கிழக்கை சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள், உள்ளூராட்சி மன்றங்களின் பிரதிநிதிகள், வடக்கு கிழக்கை சேர்ந்த அரசியல் செயற்பாட்டாளர்களுக்கு அழைப்பு விடுக்கின்றோம். எனவே கட்சி பேதங்களின்றி மக்கள் நலன் நலனுக்காக அரசியல் தலைவர்கள் அனைவரும் இந்த போராட்டத்தில் பங்கேற்குமாறு அழைப்பு விடுப்பதாக நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# டெல்லியில் வாக்காளர் பட்டியல் முறைகேட்டை கண்டித்து பேரணி நடத்திய மக்களவை எதிர்க்கட்சி தலைவர் ராகுல்காந்தி மற்றும் இந்தியா கூட்டணி எம்.பி.க்கள் கைது

வாக்காளர் பட்டியல் முறைகேட்டை கண்டித்து இந்தியா கூட்டணி எம்.பி.க்கள் பேரணி நடத்தியபோது மக்களவை எதிர்க்கட்சி தலைவர் ராகுல்காந்தியை போலீசார் கைது செய்தனர். பிரியங்கா காந்தி, கேசி வேணுகோபால் உள்ளிட்ட எம்பிக்களை கைது செய்தனர். டெல்லியில் பேரணியை போலீசார் தடுத்ததால் சாலையில் அமர்ந்து எதிர்க்கட்சி எம்பிக்கள் போராட்டம் நடத்தினர். டெல்லியில் சாலையில் அமர்ந்து எம்.பி.க்கள் போராட்டம் நடத்தியபோது கைது செய்தனர் . சஞ்சய் ராவத், அகிலேஷ் யாதவ், சுப்ரியா சுலே, மஹிபூபா மொய்த்ரா உள்ளிட்ட எம்பிக்கள் கைது செய்தனர். கைது செய்த்து பேருந்தில் ஏற்றியபோதும் பேருந்துக்குள்ளும் எம்பிக்கள் முழக்கமிட்டு போராட்டம்நடத்தினர். டெல்லி போராட்டத்தில் கனிமொழி தமிழச்சி தங்கபாண்டியன், ஜோதிமணி உள்ளிட்ட தமிழ்நாடு எம்பிக்கள் கைது செய்துள்ளனர். வாக்காளர் பட்டியல் முறைகேட்டை கண்டித்து நாடாளுமன்ற வளாகத்தில் இருந்து தேர்தல் ஆணையம் நோக்கி ராகுல்காந்தி தலையில் இந்தியா கூட்டணி எம்.பி.க்கள் பேரணி தொடங்கினர். வாக்கு திருட்டு என்ற வாசகம் அடங்கிய பதாகைகளை ஏந்தி இந்தியா கூட்டணி எம்பிக்கள் 300 பேர் ஒரு கி.மீ. தூ ரம் பேரணி நடத்தி வந்தனர்.





வாக்காளர் பட்டியல் முறைகேடு குறித்து விசாரணை நடத்த வலியுறுத்தியும், பீகார் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தத்துக்கு எதிர்ப்பு தெரிவித்தும் டெல்லியில் நாடாளுமன்ற வளாகத்தில் இருந்து இந்திய தலைமை தேர்தல் ஆணையம் நோக்கி இந்தியா கூட்டணி எம். பி.க்கள் பிரம்மாண்ட பேரணி நடத்தினர். ராகுல் காந்தி தலைமையில் இந்த பேரணி நடைபெற்றது.

இதில், 25 கட்சிகளை சேர்ந்த எம்.பி.க்கள் பங்கேற்றனர். காங்கிரஸ், சமாஜ்வாதி, திரிணமூல் காங்கிரஸ், திமுக, ஆம் ஆத்மி, இடதுசாரிகள், ராஷ்ட்ரிய ஜனதா தளம், தேசியவாத காங்கிரஸ் (சரத்பவார் பிரிவு), சிவசேனா (யுபிடி) மற்றும் தேசிய மாநாட்டுக் கட்சி உள்ளிட்ட கட்சிகளின் எம்.பி.க்கள் கலந்து கொண்டுள்ளனர். திமுக சார்பில் கனிமொழி எம்.பி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

பேரணியாக சென்ற எம்.பிக்களை டெல்லி காவல்துறை தடுத்து நிறுத்தியது. இதைத்தொடர்ந்து எம். பிக்களுடன் டெல்லி காவல்துறை பேச்சு வார்த்தை நடைபெறுகிறது. இதற்கிடையே, பிரியங்கா காந்தி உள்ளிட்ட எம்.பிக்கள் தரையில் அமர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். இதனால் அப்பகுதியில் பரபரப்பான சூழல் நிலவுகிறது.

ஆனால், இந்தப் பேரணிக்கு டெல்லி போலீஸார் அனுமதி கொடுக்கவில்லை எனத் தெரிகிறது. மேலும், இந்தப் பேரணிக்காக இண்டியா கூட்டணி சார்பில் முறையாக அனுமதி கோரியும் விண்ணப்பிக்கப்படவில்லை என டெல்லி போலீஸ் தகவல் தெரிவிக்கின்றன.

இருபினும், இண்டியா கூட்டணி பேரணியை நடத்தி வருகிறது. பேரணியில் ஆங்கிலம், இந்தி, தமிழ், வங்காளம், மராத்தி உள்ளிட்ட மொழிகளில் பிஹாரில் நடைபெறு சிறப்பு வாக்காளர் திருத்தத்துக்கு எதிர்ப்பு தெரிவித்தும் வாக்கு திருட்டுக்கு எதிர்ப்பு தெரிவித்தும் பதாகைகள் ஏந்திச் சென்றனர்.

இந்நிலையில் இந்தியா கூட்டணி எம்.பி.க்கள் பேரணி நடத்தியபோது மக்களவை எதிர்க்கட்சி தலைவர் ராகுல்காந்தியை போலீசார் கைது செய்தனர். பிரியங்கா காந்தி, கேசி வேணுகோபால் உள்ளிட்ட எம்பிக்களை கைது செய்தனர். டெல்லியில் பேரணியை போலீசார் தடுத்ததால் சாலையில் அமர்ந்து எதிர்க்கட்சி எம்பிக்கள் போராட்டம் நடத்தினர். டெல்லியில் சாலையில் அமர்ந்து எம்.பி.க்கள் போராட்டம் நடத்தியபோது கைது செய்தனர் .(ஐ)



## சுரேஷ் கோபியை காணவில்லை

நடிகரும் மத்திய இணை அமைச்சருமான சுரேஷ் கோபியை காணவில்லை என கேரள பொலிஸில் புகாரளிக்கப்பட்டுள்ளது.

கேரள மாணவர் சங்கத்தின் மாவட்டத் தலைவரான கோகுல் குருவாயூர் என்பவர் திருச்சூர் கிழக்கு பொலிஸ் நிலையத்தில் அளித்த புகாரில், கேரளாவைச் சேர்ந்த கன்னியாஸ்திரிகள் சத்தீஸ்கரில் கைது செய்யப்பட்ட சம்பவத்துக்குப் பிறகு சுரேஷ் கோபியை அந்தப் பகுதியில் காணவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் “கடந்த இரண்டு மாதங்களாக, மத்திய அமைச்சராகவும் திருச்சூர் மக்களவை எம்.பியாகவும் இருக்கும் அவர், தொகுதியில் நடக்கும் எந்த நிகழ்வுகளிலும் கலந்து கொள்ளவில்லை. மேயர் மற்றும் வருவாய்த் துறை அமைச்சரால் கூட அவரை தொடர்பு கொள்ள முடியவில்லை. தொகுதியில் மத்திய அரசின் திட்டம் ஒன்றை தொடங்கி வைக்க சுரேஷ் கோபியை அவர்கள் தொடர்பு கொள்ள முயற்சித்த போது அவரிடம் அவர்களால் பேசமுடியவில்லை. அதுமட்டுமின்றி தொகுதில் யாராலும் அவரை சந்திக்க இயலவில்லை. அவருடைய அலுவலகத்துக்கு சென்றால் அவர் எங்கு இருக்கிறார்? எப்போது வருவார் என்று அங்குள்ள ஊழியர்களுக்கும் தெரியவில்லை.

நத்தார் பண்டிகையின் போது கிறிஸ்தவர்களின் வீடுகளுக்கு சென்று கேக் வழங்குவார் சுரேஷ் கோபி. ஆனால் சத்தீஸ்கர் மாநிலத்தில் கேரளாவைச் சேர்ந்த கன்னியாஸ்திரிகள் மீது பொய் வழக்கு பதியப்பட்ட சம்பவத்துக்குப் பிறகு அவரை எங்கும் காணவில்லை” என்று கோகுல் குருவாயூர் தனது புகாரில் தெரிவித்துள்ளார்.

காங்கிரஸின் கிளை அமைப்புகளில் ஒன்றான கேரள மாணவர் சங்கம், சுரேஷ் கோபிக்கு எதிரான பிரச்சாரங்களை முடுக்கி விட இருப்பதாக தெரிவித்துள்ளது. மேலும் சுரேஷ் கோபி தொகுதிக்கு வராதது குறித்து விசாரணை நடத்த வேண்டும் என்று கோரியுள்ள கேரள மாணவர் சங்கம், அவர் தனது நிலைப்பாட்டை தெளிவுபடுத்தும் வரை போராட்டங்கள் தீவிரப்படுத்தப்படும் என்றும் எச்சரித்துள்ளது. (ஐ)

## போதையில்லாத் தமிழ்நாட்டை உருவாக்குவோம்: உதயநிதி ஸ்டாலின் உறுதிமொழி




மனித ஆற்றலை மழுங்கடித்து ஒட்டுமொத்த சமூகத்திற்கும் பெருங்கேடு விளைவிக்கும் போதைப் பொருட்களை தவிர்ப்பதன் அவசியத்தை வலியுறுத்திநடைபெற்ற, ‘போதைப் பொருட்கள் இல்லாத தமிழ்நாடு’ எனும் மாநில அளவிலான பெருந்திரள் விழிப்புணர்வு நிகழ்ச்சியை சென்னை நந்தனம் அரசுக் கலைக்கல்லூரியில் இன்று தொடங்கி வைத்து, உறுதிமொழியேற்றோம்.

தமிழ்நாடு முழுவதுமிருந்து காணொலி வாயிலாக இணைந்த மாணவர்கள், போதைப் பொருட்களை தவிர்ப்போமென உறுதியேற்றனர். தமிழ்நாட்டில் போதைப்பொருள் உற்பத்தி மற்றும் சட்டவிரோதக் கடத்தலை ஒழிப்பது மற்றும் போதைப் பொருள் வழக்குகளில் சிறப்பாக பணியாற்றிய காவல்துறை அலுவலர்கள் மற்றும் காவல் ஆளிநர்களுக்கு 2025 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு முதலமைச்சர் காவலர் சிறப்பு பதக்கங்களை வழங்கினோம்.

போதைப்பொருள் எதிர்ப்பு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் போதை பொருள் எதிர்ப்பு மன்றம் அமைத்து மாநில அளவில் சிறப்பாக செயல்பட்ட பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியர்களிடையே வெற்றிக்கோப்பை, சான்றிதழ் மற்றும் பரிசுத்தொகை காசோலைகளையும் வழங்கி வாழ்த்தினோம். போதைப் பொருளுக்கு எதிரான இந்த உறுதிமொழியை ஒவ்வொருவரும் கடைப்பிடிப்பது அவசியம். (ஐ)

## கூலி திரைப்படத்தை இணையத்தில் வெளியிட 36 இணையதள சேவை நிறுவனங்களுக்கு ஐகோர்ட் தடை



கூலி திரைப்படத்தை இணையத்தில் வெளியிட 36 இணையதள சேவை நிறுவனங்களுக்கு சென்னை உயர்நீதிமன்றம் தடை விதித்துள்ளது. நடிகர் ரஜினிகாந்த் நடிப்பில் இயக்குனர் லோகேஷ் கனகராஜ் இயக்கத்தில் தயாராகியுள்ள கூலி திரைப்படம் வரும் 14-ம் தேதி உலங்கெங்கும் வெளியாகவுள்ளது. இப்படத்திற்கு அனிருத் இசையமைத்துள்ளார். இந்தப் படத்தில் அமீர் கான், சத்யராஜ், நாகர்ஜ/னா, சவுபின் ஷாஹிர், ஸ்ருதிஹாசன், பகத் பாசில், ரெபா மோனிகா ஜான் மற்றும் உபேந்திரா ஆகியோர் நடித்துள்ளனர்.

இப்படம் டிக்கெட் முன்பதிவில் மட்டும் 50 கோடி வசூல்செய்துள்ளதாக கூறப்படுகிறது. இந்தநிலையில், மிக பிரம்மாண்டமான முறையில் தயாரிக்கப்பட்டுள்ள இந்த திரைப்படத்தை இணையதளங்கள், கேபிள் நெட்ஒர்க்களிலோ வெளியிட தடை விதிக்க வேண்டும் என சன்பிக்சர்ஸ் தயாரிப்பு நிறுவனம் சார்பில் சென்னை உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டது.

இந்த மனுவை விசாரித்த நீதிபதி செந்தில் குமார் ராமமூர்த்தி முன்பு விசாரணைக்கு வந்தது. அப்போது இது தொடர்பாக 36 இணையதள சேவை நிறுவனங்களுக்கும், 5 கேபிள் டீவி நெட்ஒர்க் நிறுவனங்களுக்கும் இந்த திரைப்படத்தை வெளியிடுவதற்கு தடை விதித்து நீதிபதி உத்தரவிட்டுள்ளார். (ஐ)

# வந்தியத்தேவனின் வழித்தடத்தில் மாதோட்டம்!

–ரமாதேவி ரத்தினசாமி




நாகத்தீவு நோக்கிப் படகில் செல்லும்போது பூங்குழலி, வந்தியத தேவனுக்கு மாதோட்டம் செல்லும் பாதையை இப்படிக் கூறுகிறாள்: “மாதோட்டம் (நாகத்தீவிலிருந்து) இங்கிருந்து ஐந்து ஆறு காத தூரம் இருக்கும். வழியெல்லாம் ஒரே காடு, கோடிக்கரைக் காடு மாதிரி இருக்கும் என்று நினைக்காதே. வானை எட்டும் மரங்கள் அடர்ந்த காடு, பட்டப்பகலில்கூட சில இடங்களில் இருட்டாக இருக்கும். யானைக் கூட்டங்களும் வேறு பல துஷ்ட மிருகங்களும்கூட உண்டு. நீ ஜாக்கிரதையாகப் போய்ச்சேர வேண்டும்.” வாசிக்கும்போதே கடற்புறத்தை ஒட்டிய அந்த அடர்ந்த காடுகள் மனதில் நிழலாடி அச்சமூட்டுகின்றன.




நாகத்தீவிலிருந்து அடர்ந்த காடுகளைக் கடந்து வரும் வந்தியத்தேவன், ஈழத்துக் கடற்கரையோடு நடந்து சென்று, மன்னார் வளைகுடா பகுதியில் அமைந்துள்ள பாலாவி நதிக்கரையில் இருந்த மாதோட்ட மாநகரை அடைகிறான். அங்கு ஆழ்வார்க்கடியானை மீண்டும் சந்திக்கிறான். இந்த மாதோட்ட எழிலையும் இயற்கை சூழலையும் ரசித்து ரசித்து வர்ணித்திருப்பார் கல்கி.

“அம்மாநகரம், திருஞான சம்பந்தர் காலத்திலும், சுந்தரமூர்த்தியின் காலத்திலும் இருந்ததுபோலவே இப்போதும்பசுமையான மரங்கள் அடர்ந்த சோலைகளினால் சூழப்பட்டுக் கண்ணுக்கு இனிய காட்சி அளிக்கிறது. மாவும் பலாவும் தென்னையும் கமுகும் கதலியும் கரும்பும் அந்தக் கரையைச் சுற்றிலும் செழித்து வளர்ந்திருந்தன. அந்த மரங்களில் வானரங்கள் ஊஞ்சலாடின, வரி வண்டுகள் பண்ணிசைத்தன, பைங்கிளிகள் மழலை பேசின. அந்நகரின் கோட்டை மதில்களின் மேல் கடல் அலைகள் மோதிச் சலசலவென்று சப்தம் உண்டாக்கின. மாதோட்ட நகரின் துறைமுகத்தின் பெரிய மரக்கலங்கள் முதல் சிறிய படகுகள் வரை நெருங்கி நின்றன. அவற்றிலிருந்து இறக்கப்பட்ட பண்டங்கள் மலை மலையாகக் குவிந்துகிடந்தன. இவையெல்லாம் சம்பந்தர், சுந்தரர் காலத்தில் இருந்தது போலவே இருந்தாலும் வேறு சில மாறுதல்கள் காணப்பட்டன. மாதோட்ட நகரின் வீதிகளில் இப்போது கேதேஸ்வர ஆலயத்துக்குச் செல்லும் அடியார்களின் கூட்டத்தை அதிகம் காணவில்லை. பக்தர்கள் இறைவனைப் பாடிப் பரவசமடைந்த இடங்களிலெல்லாம் இப்போது போர் வீரர்கள் காணப்பட்டனர். கத்தியும் கேடயமும் வாளும் வேலும் கையில் கொண்ட வீரர்கள் அங்குமிங்கும் திரிந்தார்கள். சென்ற நூறு ஆண்டுகளுக்கு அதிகமாக அந்த நகரம் ஒரு யுத்த கேந்திரஸ்தலமாக விளங்கிவந்தது. தமிழ்நாட்டிலிருந்து ஈழத்துப் போருக்கு வந்த படைகள் பெரும்பாலும் அங்கேதான் இறங்கின. திரும்பிச் சென்ற படைகளும் அங்கேதான் கப்பல் ஏறின. நகரம் பலதடவை கைமாறிவிட்டது. சில சமயம் இலங்கை மன்னர்களிடமும் சில சமயம் பாண்டிய அரசர்களிடமும் அது இருந்தது. பராந்தக சக்கரவர்த்தியின் காலத்திலிருந்து சோழர்களின் ஆதிக்கத்தில் இருந்துவந்தது. அத்தகைய யுத்த கேந்திர நகரத்தின் கோட்டை மதில் வாசலில் ஒருநாள் வந்தியத்தேவன் வந்து நின்றான்.” பொன்னியின் செல்வன் நாவல் வாசித்த பதின்பருவத்திலேயே இலங்கை மீது கொண்ட காதல், நாற்பது வயதில் நேரில் பார்க்கும் போது சிலிர்ப்பூட்டியது.



கல்கியின் கற்பனைக்கு அப்பாற்பட்டு பார்த்தாலும், சோழ, சேர, பாண்டிய, பல்லவ சக்கரவர்த்திகளும் அவர்களுக்கு முன்னதாக, சுந்தரரும் திருஞான சம்பந்தரும் அதற்கும் முன்னதாக புத்தபிரானும் நடமாடிய வரலாற்றுப் பூமியாகத்தான் இருக்கிறது மாதோட்டம். இலங்கைக் கரையெங்கும் காணக்கிடைக்கிறது அந்த அதிசய தேசத்தின் வரலாற்று எச்சங்கள். இன்று மன்னார் மாவட்டமாக உருவெடுத்திருக்கும் பகுதியில்தான் எத்தனையெத்தனை வரலாறுகள் பொதிந்து கிடக்கின்றன? மன்னார் மாவட்டத்தின் பழம் பெருமைக்குச் சான்றாக இருக்கிறது மாதோட்டத் துறைமுகம். பாளி மொழியில் எழுதப்பட்ட பழைய வரலாற்று நூல்கள் இதனை மாதொட்ட அல்லது மகாதித்த என்று குறிப்பிட, தமிழ் நூல்கள் மாந்தை அல்லது மாதோட்டம் என அழைக்கின்றன.

வரலாற்றுக்காலத்திற்கு முந்திய காலத்திலேயே இந்தியா உட்பட பிறநாட்டு வணிகர்கள் வந்துசென்ற துறைமுகப்பட்டினமாக விளங்கியிருக்கிறது மாதோட்டம் என்னும் நகரம். இலங்கைத்தீவின் வடமேற்குக் கரையில் இன்றைய வட மாகாணத்தின் மன்னார் மாவட்டத்தில், மல்வத்து ஓயா என அழைக்கப்படும் ஆற்றின் கழிமுகத்தை ஒட்டி அமைந்திருந்தது. அன்றையத் தலைநகரமான அனுராதபுரத்துடன் சிறப்பான போக்குவரத்து வசதிகளைக்கொண்டிருந்தது. மன்னார் மாவட்டத்தின் ஒரு பகுதி இன்றும் மாந்தைப் பற்று என்று அழைக்கப்படுகிறது. தமிழகத்திலிருந்து சில மைல்கள் தொலைவில் கூப்பிடு தூரத்திலேயே இருந்ததால் தென்னிந்தியாவுடனான வணிகத் தொடர்பு இயல்பாக மலர்ந்தது. இங்கு தென்னிந்தியர்கள் அதிக அளவில் வாழ்ந்து வந்ததாகவும் தெரிகிறது. அருகில்தான் திருக்கேதீஸ்வரம் என்னும் புகழ்பெற்ற சிவன்கோவில் உள்ளது. ராமர், அகத்தியர், அருச்சுனன் ஆகியோர் மாந்தோட்டத் துறைமுகத்தின்மூலம் கடலைக் கடந்து இலங்கைக்கு வந்தார்கள் என்கிறது புராணங்கள். சுந்தரரும் திருஞான சம்பந்தரும் நடமாடிய பூமி என்கின்றன இலக்கியங்கள். சோழர் காலத்தில் முக்கிய நிகழ்வுகள் நடைபெற்ற இடம் என்ற செய்தியை புனைவு கலந்து ரசிக்கத்தருகிறது பொன்னியின் செல்வன்.

இந்நகரம் கம்மாளர் சமூகத்தைச் சேர்ந்தவர்களால் கட்டப்பட்டதாகவும், பலம் பொருந்திய அவர்கள் பன்னெடுங்காலமாக இப்பகுதியை ஆட்சி செய்தார்கள் எனவும் ஒல்லாந்து தேசத்தைச் சேர்ந்த பற்றலொக்கு என்பவர் எழுதிய ‘இலங்கை’ என்னும் நூலின் வாயிலாக அறிய முடிகிறது.

கொள்ளா நரம்பினிமிரும் பூசல் இரைதேர் நாரை யெய்திய விடுக்கும் துறைஎகழு மாந்தை யன்ன” - நற்றிணை

நன்னகர் மாந்தை முற்றத் தொன்னார் பணிதிரை கொணர்ந்த பாடு சேர் நன்கலம் - அக நானூறு

வண்டு பண்செய்யும் மாமலர் பொழில் மஞ்சை நடமிடும் மாதோட்டம் - திருஞான சம்பந்தர்

வாழையாம் பொழில் மந்திகள் களிப்புற மருவிய மாதோட்டம் பொன்னிலங்கிய முத்து மாமணிகளும் பொருந்திய மாதோட்டம் மானமும் பூகமும் கதலியும் நெருங்கிய மாதோட்டம் நன்னகர் –தேவாரம்

இப்படி அத்தனை இலக்கியங்களும் மாய்ந்து மாய்ந்து மாதோட்டத்தை வர்ணிக்கின்றன.

தமிழ் இலக்கியங்கள் மட்டுமல்ல, பாளி மொழியின் மகாவம்சமும் மாதிட்டை என்று அழைக்கப்படும் மாதோட்டத்தை எண்ணிலடங்காத மரக்கலங்களின் புகலிடம் என்றும், அங்கு மாட மாளிகைகள் நிறைந்திருந்ததாகவும், பூம்பொழில்கள், பழத் தோட்டங்கள் வயல்கள் சூழ்ந்திருந்ததென்றும் கூறுகிறது. மாதோட்டம் மூலம் வந்த முத்துகளையும் பட்டாடைகளையும் அணிந்து வாசனைப்பொருள்களைப் பாவித்து, ரோமர்கள் ஆடம்பரமாக வாழ்ந்தனர் என்று பெரிபுளுஸ் என்ற அயலக நூல் சற்றே வயிற்றெரிச்சலுடன் வியக்கிறது.

மாந்தோட்ட துறைமுகம் பாலாவி ஆற்றுமுகத்தில் இருந்தது. மலையளவு அலைகள் எழுந்தும் விழுந்தும் ஆர்ப்பரித்தன. ஆற்றின் தெற்குக்கரையில் அலைவாய்க்குரடுகளும் (நைசள) கிடங்குகளும் அமைந்திருந்தன. இப்பொழுது அக்கிராமம் வங்காலை (வங்கக்கலங்கள் கலக்குமிடம்) என்று அழைக்கப்படுகிறது. எகிப்து, மெசபடோமியா, பாலஸ்தீனம், கிரேக்க, ரோமானிய நாடுகளிலிருந்து அரபிக்கடல் வழியாக கடல்வழி வாணிகம் அக்காலத்தில் நடந்திருக்கிறது. தென்மேற்குப் பருவமழையின் சீற்றத்திலிருந்து மாதோட்டத் துறைமுகம் புகலிடமளித்து அவர்களைக் காத்தது. காரணம் மன்னார்தீவும் ராமர் அணையும்தான். அக்காலத்தில் மன்னார் தீவுக்கும் இலங்கை நிலத்திற்கும் இடையேயுள்ள நீர்ப்பரப்பு இரு பருவமழைகளால் ஏற்படும் கடல் நீரோட்டத்தால் மணல் தட்டாமல், கப்பல் போக்குவரத்துக்கு ஏற்றதாக இருந்திருக்கிறது. கப்பல்கள் செல்லுமளவுக்கு ஆழமான மன்னார் கடற்கால் எப்படிச் சதுப்புநிலமானது? மிகச் சிறந்த மாந்தோட்டத்துறைமுகம் எப்படி மணல் மேடுற்றது? அலைமோதிய பாலாவியாறு எப்படி ஒரு சிறு வாய்க்காலானது? அதைச் சுற்றியிருந்த நிலப்பகுதி எப்படித் தரிசு நிலமானது? இயற்கையின் விந்தையை யாரறிவார்?

அன்றொரு நாள், மாதோட்டத்தின் பொற்காலத்தில் பதினோராம் நூற்றாண்டுக்கு முன்னதான இரண்டாயிரம் ஆண்டுகளாக

(7ஆம் பக்கம் பார்க்க...)

# ரத்தன் டாடா இருந்திருந்தால்... விமான விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினர் வேதனை!

ரத்தன் டாடா மட்டும் உயிரோடு இருந்திருந்தால், விமான விபத்தில் உயிரிழந்தவர்களுக்கான நிவாரணம் வழங்குவதில் இவ்வளவு தாமதம் ஏற்பட்டிருக்காது என்று அமெரிக்க வக்கீல் தெரிவித்துள்ளார்.

கடந்த ஜூன் 12ம் தேதி ஆமதாபாத்தில் இருந்து புறப்பட்ட ஏர் இந்திய விமானம், சில வினாடிகளிலேயே தனியார் மெடிக்கல் கல்லூரியின் மீது விழுந்து விபத்துக்குள்ளானது. இதில், பயணிகள் 147 பேர் மற்றும் அப்பகுதியைச் சேர்ந்த 19 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். இந்த விபத்தில் உயிரிழந்தவர்களுக்கு ரூ.1 கோடி நிவாரணமாக வழங்கப்படும் என்று அறிவித்த டாடா குழுமம், நிவாரணத்தை உரிய முறையில் வழங்க 'ஏஐ-171 நினைவு மற்றும் நலன் அறக்கட்டளை'யையும் அமைத்தது. முதற்கட்டமாக, உயிரிழந்தவர்களின் குடும்பத்திற்கு இடைக்கால நிவாரணமாக ரூ.25 லட்சம் வழங்கப்பட்டது.



ஆவண சரிபார்ப்பு பணிகள் உள்ளிட்ட காரணங்களால் பல குடும்பங்களுக்கு நிவாரணத் தொகை இன்னும் சென்றடையவில்லை என்று கூறப்படுகிறது. இதனிடையே விமான விபத்தில் உயிரிழந்தவர்களில் 65 குடும்பங்களின் சார்பு அமெரிக்க வக்கீல் மைக் ஆண்ட்ரூஸ், 'ரத்தன் டாடா மட்டும் உயிரோடு இருந்திருந்தால், விமான விபத்தில் உயிரிழந்தவர்களுக்கான நிவாரணம் வழங்குவதில் இவ்வளவு தாமதம் ஏற்பட்டிருக்காது,' என்று கூறியுள்ளார்.

மேலும் அவர் கூறியதாவது ரத்தன் டாடா யார் என்பது குறித்து அமெரிக்காவில் கூட நன்கு தெரியும். அவரது வேலை நெறிமுறை, தன்னடக்கம் மற்றும் ஊழியர்களைக் கவனித்துக்கொள்ளும் அணுகுமுறை பற்றி நாங்கள் அறிவோம். அவர் மட்டும் தற்போது இருந்தால், விமான விபத்தில் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்கள், நிவாரணத்தை தாமதமாகப் பெறும் நிலைக்கு தள்ளப்பட்டிருக்க மாட்டார்கள்,

படுக்கை படுக்கையாக இருக்கும் ஒருவர், தனது மகனின் உதவியுடன் மருத்துவ சிகிச்சை பெற்று வந்தார். அவரது மகன் விமான விபத்தில் இறந்துவிட்டார். இன்னும் இவருக்கு நிவாரணம் கிடைக்கவில்லை. இவர்கள் என்ன செய்வது? இப்போது உலகின் கருணையை நம்பியே இருக்க வேண்டியுள்ளது, எனக் கூறினார். (ஐ)

# காசாவில் தாக்குதலை தீவிரப்படுத்தியது இஸ்ரேல் பத்திரிகையாளர்கள் 5 பேர் உயிரிழப்பு




காசா நகரில் உள்ள ஒரு பத்திரிகையாளர் கூடாரத்தின் மீது இஸ்ரேல் நடத்திய வான்வழித் தாக்குதலில் ஐந்து அல் ஜசீரா பத்திரிகையாளர்கள் கொல்லப்பட்டனர்.

மேற்காசிய நாடான இஸ்ரேல், ஹமாஸ் பயங்கரவாதிகள் கட்டுப்பாட்டில் உள்ள காசா மீது 2023ல் போர் துவங்கியது. காசாவின் 80 சதவீத பகுதி தற்போது இஸ்ரேல் ராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ளது. மீதமுள்ள 20 சதவீத பகுதிகளிலும் தாக்குதல்களை தீவிரப்படுத்தி, உள்ளது. இஸ்ரேல் தாக்குதல்களில் 61,000 க்கும் மேற்பட்ட பாலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டுள்ளதாக காசா சுகாதார அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

இந்நிலையில், காசா நகரில் உள்ள ஒரு பத்திரிகையாளர் கூடாரத்தின் மீது இஸ்ரேல் நடத்திய வான்வழித் தாக்குதலில் பிரபல நிருபர் அனஸ் அல்-ஷெரிப் உட்பட ஐந்து அல் ஜசீரா பத்திரிகையாளர்கள் கொல்லப் பட்டனர். இஸ்ரேல் ராணுவம் இந்தத் தாக்குதலை நடத்தியதை உறுதிப்படுத்தியது.

அல்-ஷெரிப் ஒரு ஹமாஸ் செயல்பாட்டாளர் என்றும், அவர் ஒரு பத்திரிகையாளராகக் காட்டிக் கொண்டு ராக்கெட் தாக்குதல்களுக்குப் பொறுப்பான பயங்கரவாதக் குழுவை வழிநடத்தியதாக இஸ்ரேல் ராணுவம் குற்றம் சாட்டியது.

'ஹமாஸ் பயங்கரவாத அமைப்பில் ஒரு பயங்கரவாதப் பிரிவின் தலைவராக அனஸ் அல் ஷெரீப் பணியாற்றினார், மேலும் இஸ்ரேலிய பொதுமக்கள் மற்றும் இஸ்ரேல் பாதுகாப்பு படையினருக்கு எதிராக ராக்கெட் தாக்குதல்களை முன்னெடுப்பதற்கு அவர் பொறுப்பேற்றார்' என்று இஸ்ரேலிய ராணுவம் தெரிவித்துள்ளது. (ஐ)



# துருக்கியில் பயங்கர நிலநடுக்கம் ஏராளமான கட்டடங்கள் இடிந்து சேதம்

துருக்கியில் ஏற்பட்ட சக்திவாய்ந்த நிலநடுக்கத்தினால், ஏராளமான கட்டங்கள் இடிந்து விழுந்தன. இதில், இடிபாடுகளில் சிக்கியவர்களை மீட்கும் பணி நடந்து வருகிறது.

இஸ்தான்புல்லில் இருந்து தெற்கு பகுதியில் சுமார் 200 கிமி தொலைவில் இந்த நில அதிர்வானது உணரப்பட்டுள்ளது. இது ரிக்டர் அளவுகோலில் 6.1ஆக பதிவாகியுள்ளது. வடமேற்கு பலகேசிர் மாகாணத்தில் பெருத்த சேதம் ஏற்பட்டுள்ளது சுமார் 15க்கும் மேற்பட்ட கட்டடங்கள் இடிந்து விழுந்துள்ளது.

இடிபாடுகளில் சிக்கியவர்களை மீட்கும் பணி நடந்து வருகிறது. தற்போது வரையில் ஒருவர் உயிரிழந்துள்ளார். 29 பேர் பலத்த காயங்களுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த 2023ம் ஆண்டு 7.8 என்ற அளவில் ஏற்பட்ட சக்திவாய்ந்த நிலநடுக்கத்தால் துருக்கியில் 53,000 பேரும், வடக்கு சிரியாவில் 6000 பேரும் உயிரிழந்தது குறிப்பிடத்தக்கது. (ஐ)



# குளோரின் வாயுவை சுவாசித்த 600 யாத்ரீகர்கள் பாதிப்பு

ஈராக்கில் நீர் சுத்திகரிப்பு ஆலையில் இருந்து கசிந்த 'குளோரினை' சுவாசித்ததால், 600க்கும் மேற்பட்ட யாத்ரீகர்களுக்கு மூச்சுத்திணறல் ஏற்பட்டது. இதனால், அவர்கள் சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

மேற்காசிய நாடான ஈராக்கில் உள்ள நஜாப் மற்றும் கர்பாலா நகரங்களுக்கு, ஷியா பிரிவு முஸ்லிம்கள் புனித யாத்திரை மேற்கொள்வது வழக்கம். ஈராக்கின் தெற்கு மற்றும் மையப் பகுதியில் இந்த இரு நகரங்களும் அமைந்துள்ளன.

இந்நிலையில், கர்பாலா - நஜாப் சாலை இடையே உள்ள நீர் சுத்திகரிப்பு ஆலையில் நேற்று முன்தினம் திடீரென குளோரின் வாயு கசிந்தது. அப்போது, கர்பாலாவுக்கு புனித யாத்திரை வந்த 600க்கும் மேற்பட்ட யாத்ரீகர்களுக்கு, இந்த வாயுவை சுவாசித்ததால் மூச்சுத்திணறல் ஏற்பட்டது.

இதையடுத்து, பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்த போலீசார், அவர்களை மீட்டு அங்குள்ள மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதித்தனர். (ஐ)

# அதிபரை கைது செய்ய உதவினால் ரூ.415 கோடி பரிசு

வெனிசுலா அதிபர் நிக்கோலஸ் மதுரோவை கைது செய்வதற்கு உதவுவோருக்கு, 415 கோடி ரூபாய் பரிசுத் தொகை வழங்கப்படும் என அமெரிக்கா அறிவித்துள்ளது.



தென் அமெரிக்க நாடுகளில் ஒன்றான வெனிசுலாவில், மூன்றாவது முறையாக நிக்கோலஸ் மதுரோ அதிபராக உள்ளார். இவர், உலகின் மிகப்பெரிய போதைப்பொருள் கடத்தல்காரர்களில் ஒருவராக செயல்படுவதாகவும், போதைப்பொருள் கும்பல்களுடன் இணைந்து அமெரிக்காவிற்குள் போதைப் பொருட்களை சப்ளை செய்வதாகவும், கடந்த 2020ல் அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப் குற்றஞ்சாட்டினார்.

அவருக்கு எதிராக மன்ஹாட்டன் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது. அப்போது, நிக்கோலஸ் மதுரோவை கைது செய்ய உதவுவோருக்கு, 131 கோடி ரூபாய் பரிசுத் தொகை அறிவிக்கப்பட்டது. பின்னர், ஜோ பைடன் அரசு அந்தத் தொகையை 200 கோடி ரூபாயாக உயர்த்தியது.

இவ்வளவு பெரிய பரிசுத் தொகை அறிவிக்கப்பட்டபோதிலும், நிக்கோலஸ் மதுரோ தொடர்ந்து பதவியில் நீடித்து வருகிறார்.

இந்நிலையில், தற்போது மதுரோவை கைது செய்வதற்கான பரிசுத்தொகையை, அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப், 415 கோடி ரூபாயாக உயர்த்தி அறிவிப்பு வெளியிட்டுள்ளார். (ஐ)

## நான்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

டிப்பர், கூலர், கார் மற்றும் மோட்டார் சைக்கிள் என்பன ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது. அதில் ஐவர் படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில், அவர்களில் ஆண் ஒருவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ் . போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் கொடிகாமம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## மட்டக்களப்பில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

விற்பனை நிலையத்தில் பணியாற்றும் 34 வயதுடைய நபரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

நேற்று மாலை வீட்டை விட்டு வெளியேறியவர் இரவாகியும் வீடு திரும்பாததால் குடும்பத்தினர் அவரைத் தேடி வந்துள்ளனர்.

இந்நிலையில் இன்று சவுக்கடி கடற்கரைப் பகுதியில் ஆண் ஒருவரின் சடலம் காணப்படுகின்றது என்று பொலிஸாருக்குத் தகவல் கிடைத்துள்ளது.

சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸாரும், தடயவியல் பிரிவு பொலிஸாரும் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

சம்பவ இடத்தில் உயிரிழந்தவரின் மோட்டார் சைக்கிளும் மீட்கப்பட்டுள்ளது.

## கத்திக் குத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நால்வர் படுகாயமடைந்துள்ளனர்.

புங்குடுதீவு, முதலாம் வட்டாரத்தை சேர்ந்த அற்புதராசா அகிலன் (வயது 40) என்பவரே உயிரிழந்துள்ளார்.

மேற்படி நபர் மீது சரமாரியாககே கத்திக்குத்துத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதில் அந்த நபர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

இதேவேளை, கத்திக்குத்துத் தாக்குதலை மேற்கொண்ட நபரைப் பிடிக்க முயன்ற இரு பெண்கள் உள்ளிட்ட நால்வர் மீதும் கத்திக்குத்து தாக்குதலை மேற்கொண்டு விட்டு தாக்குதலாளி தப்பிச் சென்றுள்ளார்

தாக்குதலுக்கு இலக்காகி காயமடைந்த நால்வரும் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் ஊர்காவற்றுறைப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## ஹர்த்தாலுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பகுதியில் இராணுவத்தால் தாக்கப்பட்டு உயிரிழந்தார் எனக் கூறப்படும் இளைஞரின் மரணத்துக்கு நீதி கோரி நடைபெறவுள்ள ஹர்த்தாலுக்கு இலங்கையராகவும், மலையகத்தமிழராகவும், எனது முழுமையான ஆதரவைத் தெரிவிக்கின்றேன்." - என்று அறிக்கையொன்றின் ஊடாக ஜீவன் தொண்டமான் எம்.பி. அறிவித்துள்ளார்.

"நீதிக்காகவும், இராணுவத்தின் அநீதியான நடவடிக்கைகளுக்கு எதிராகவும் நடைபெறவுள்ள இந்தக் ஹர்த்தாலுக்கு எனது உறுதியான ஆதரவை வெளிப்படுத்துகின்றேன்.

யுத்தம் நிறைவடைந்து 16 ஆண்டுகள் கடந்த பின்பும், இவ்வாறான மனிதாபிமானமற்ற செயற்பாடுகள் நிகழ்வது மிகவும் வருத்தமளிக்கின்றது. இப்படியான சம்பவங்கள் ஏற்றுக்கொள்ள முடியாதவை." - என்றும் ஜீவன் தொண்டமான் எம்.பி. குறிப்பிட்டுள்ளார்.

## முத்து....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கபில்ராஜ்ஜின் சடலம் இன்று நல்லடக்கம் செய்யப்படவுள்ள நிலையில், பொலிஸார், விசேட அதிரடிப் படையினர் பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இதேவேளை, கபில்ராஜ்ஜின் சடலத்துக்கு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச்செயலாளர் எம்.ஏ.சுமந்திரன், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் ஆகியோரின் தலைமையில் முல்லைத்தீவு மாவட்ட இலங்கைத் தமிழரசுக் கட்சியினரால் இன்று அஞ்சலி செலுத்தப்பட்டது.

அந்தவகையில் முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள பிரதேச சபைகளின் தவிசாளர்கள், பிரதேச சபை உறுப்பினர்கள், தமிழரசுக் கட்சியின் தொண்டர்கள் உள்ளிட்ட பலரும் இந்த அஞ்சலி நிகழ்வில் பங்கேற்றிருந்தனர்.

மேலும் இதன்போது இராணுவத்தின் தாக்குதல் சம்பவம் தொடர்பில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச்செயலாளர் எம்.ஏசுமந்திரன் பாதிக்கப்பட்டவர்களிடம் கேட்டறிந்து கொண்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## ஹர்த்தால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ான் இந்தக் ஹர்த்தால் சொல்லப் போகும் செய்தி. போர் செய்த இராணுவம் சும்மா இருக்காது. அதிலும் இன அடிப்படையிலான போர் செய்த இராணுவச் சிப்பாய்களின் மனங்களில் இனவாதம் தங்கி இருக்கத்தான் செய்யும். எனவே, அவர்களை தென்னிலங்கைக்குக் கொண்டு வந்து, "குளம் வெட்டுவது, குளத்தில் தூர் எடுப்பது, வீதி அமைப்பது, வீடு கட்டுவது, ஹோட்டல் நடத்துவது, தோட்டம் செய்வது, காய்கறி சந்தை நடத்துவது" போன்ற இன்ன பிற அபிவிருத்திப் பணிகளில், ஜனாதிபதி - பாதுகாப்பு அமைச்சர் அநுரகுமார திஸாநாயக்க ஈடுபடுத்த வேண்டும்.

"இதற்கு முன் இப்படியான சம்பவங்கள் நடக்க வில்லையா? அப்போது நீங்கள் என்ன செய்தீர்கள்?" என எம்மைப் பார்த்து, தம்மை அறிவாளிகள் என நினைத்துக் கொண்டு, கேள்வி கேட்கும், ஜே.வி.பி. அமைச்சர்கள், எம்.பிக்கள் ஆகியோரின் வாய்ப்புகளையும் ஜனாதிபதி - பாதுகாப்பு அமைச்சர் அநுரகுமார திஸாநாயக்க மூட வேண்டும்.

"அன்றைய அரசுகள் மாறி, மாறி செய்தவற்றைச் செய்ய நாம் வரவில்லை. மாற்றி செய்யவே நாம் வந்தோம்" என நீங்கள்தான் மக்களுக்குக் கூறினீர்கள். அதேயேதான் நீங்களும் செய்ய வந்தீர்கள் என்றால், நாம் எதிர்க்கத்தான் செய்வோம்.

அரச இராணுவப் பயங்கரவாதத்தை, நாம் அப்போதும் எதிர்த்தோம். இப்போதும் எதிர்க்கின்றோம். எப்போதும் எதிர்ப்போம். வடக்கு கிழக்கில் அனைத்து மாவட்டங்களிலும் வெள்ளிக்கிழமை முழு அடைப்பு நடைபெற அழைப்பு விடுத்து இருக்கும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் கோரிக்கையைத் தமிழ் முற்போக்குக் கூட்டணி வரவேற்று, ஆதரவை அறிவிக்கின்றது." - என்றுள்ளது.

## யாழில் ஆணின் சடலம் மீட்பு



யாழ்ப்பாணம், ஒக. 11

யாழ். மண்கும்பான் கடற்கரைப் பகுதியில் இனந்தெரியாத ஆண் ஒருவரின் சடலம் இன்று மாலை மீட்கப்பட்டுள்ளது.

சடலம் ஒன்று மேற்படி கடற்பகுதியில் மிதப்பதாகக் கிராம மக்கள் பொலிஸாருக்குத் தகவல் வழங்கியதன் அடிப்படையில் ஊர்காவற்துறைப் பொலிஸார் சம்பவ இடத்துக்கு வருகை தந்து சடலத்தைப் பார்வையிட்டனர்.

ஊர்காவற்துறைப் பொலிஸாரின் விசாரணைகளின் பின் சடலம் கடலில் இருந்து மீட்கப்பட்டு யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ஊர்காவற்துறைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## மன்னார் காற்றாலை மின் கோபுர திட்டம்– எதிர்ப்பு தெரிவித்து வவுனியாவில் மனிதச்சங்கிலி போராட்டம்!

மன்னார் மக்களின் வாழ்வை பாதிக்கும் வகையில் முன்னெடுக்கப்படும் காற்றாலை மின் கோபுர திட்டம் மற்றும் கணிய மணல் அகழ்வுக்கு எதிராக மன்னாரில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற சத்தியாக்கிரக போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து வவுனியாவில் மனிதச்சங்கிலி போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

குறித்த போராட்டம் இன்று காலை முன்னெடுக்கப்பட்டது.

வவுனியா சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பின் ஏற்பாட்டில், வவுனியா வைத்தியசாலை சுற்றுவட்டத்திற்கு அண்மையில் இடம்பெற்ற இப்போராட்டத்தில் அரசியல் தரப்பினர், சமூக செயற்பாட்டாளர்கள், பொது அமைப்புக்களை சேர்ந்த பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

இதன்போது போராட்டக்காரர்கள் கருத்து தெரிவிக்கையில்,

அபிவிருத்தியின் பெயரால் மக்களின் வாழ்வுரிமையைப் பறிக்கும் இத்திட்டங்களை நிறுத்தவேண்டும். இலங்கையின் மீன்பிடி

தொழில் மற்றும் பறவைகளின் பாதுகாப்பு சரணாலயம், இயற்கை காற்றின் வலு முதலானவற்றிற்கு பெயர் பெற்ற இடமாக மன்னார் விளங்குகிறது.

இந்தநிலையில் ஏகபோக இராட்சத பல்தேசிய கம்பெனிகளின் இலாப வேட்டையாலும், இலங்கை அரசாங்கங்களின் கையாலாகாத நிலையாலும் அழிவை எதிர் நோக்கி உள்ளது மன்னார் தீவு.

ஏற்கனவே உள்ள காற்றாலைகளால் மீன் கரைக்கு வருவது குறைந்துவிட்டதுடன், மீன் இனப்பெருக்கமும் குன்றிவிட்டது.

காற்றாலைகளின் அமைப்பால் தரையில் ஏற்படுத்தப்பட்ட மாறுதல்கள், வடிகாலமைப்பை மாற்றி வெள்ளப்பெருக்கு மற்றும் நிலத்தடி நீர் உவராதலை ஏற்படுத்தியுள்ளது.

காற்றாலைகளின் இரைச்சலால் மன்னாருக்கு வரும் வலசைப்பறவைகளின் வருகையை தடுக்கவும் பாதையை மாற்றவும் அவை காற்றாடிகளால் இறக்கும் நிலையையும் ஏற்படுத்தி உள்ளது.

இது மட்டுமின்றி மக்களின் வாழ்விலும் காற்றாலைகளின் ஒலி மாசு குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது.

அத்துடன் மன்னார் மண்ணின் கீழ் இருக்கும் இல்மனைட் தோரியம் போன்ற கனிமவளங்கள் இன்றைய நவீன விஞ்ஞான உபகரணங்கள் மற்றும் இராணுவ தேவைகளுக்காக உலக நாடுகளுக்கு தேவைப்படுகின்றது. அதில் முதலீடு செய்வது பெரும் லாபம் தரும் என்பதால் பல் தேசிய நிறுவனங்கள் முண்டியடக்கின்றன. எனவே மன்னாரில் நடைபெற

இருக்கின்ற இவ் அகழ்வு மன்னார் தீவையே மனித வாழ்வுக்கு உகந்ததாக இல்லாமல் செய்துவிடும் அளவிற்கு ஆபத்தானது.

இந்த காற்றாலை மற்றும் கனிய அகழ்வு பல் தேசிய கம்பெனிகளின் இலாபக் குவிப்புக்கானதே அன்றி நாட்டின் தேவைக்கானது அல்ல என்பதை நாம் அனைவரும் உணர வேண்டும் என தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# வந்தியத்தேவனின் வழித்தடத்தில்....

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் மட்டுமின்றி தென்னிந்திய கடல் வணிகர்கள் தங்கள் சரக்குகளை சீனாவுக்குக் கொண்டு செல்லும்போதும் இடைப்பட்டுத் தங்கிச் செல்லும் துறைமுகமாகத்தான் மாதோட்டம் விளங்கியது. மிகச் சிறந்த வர்த்தக நகரமாக உருவெடுத்தது. ஈழத்து உணவு வகைகள், முத்து பவளம், நவரத்தினங்கள், யானை, யானைத் தந்தம், மயில் தோகை, மிளகு, கறுவாய், ஏலம் போன்ற பொருள்கள் மாதோட்ட துறைமுகத்திலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்டன. கப்பல் கட்டும் தொழில் நடந்திருக்கிறது. பல நாடுகளிலிருந்தும் வர்த்தகர்கள் இங்கு வந்துகூடினர், உலகின் பல பாகங்களிலிருந்தும் பண்டங்கள் மாதோட்டத்தில் வந்து குவிந்தன. செல்வம் பெருகியது, மக்கள் வளமான வாழ்க்கை வாழ்ந்தார்கள் என்கிறார் கிரேக்க அறிஞர் கொஸ்மன் இண்டிக்கோ பிளஸ்தேஸ் தனது நூலில்.

அச்சமயத்தில் இந்தியாவின் ராமேஸ்வரம் கோயிலுக்கு நிகரான சிறப்புடன் திருக்கேதீஸ்வரம் கோயில் சிறப்புப் பெற்றிருந்தது. ஆனால், அது இந்தியாவிலிருந்து இலங்கைக்குப் படையெடுத்துவரும் ராணுவத்தின் வழியில் இருந்ததால், அதிகம் தாக்குதலுக்கு உள்ளானது. ஒருகட்டத்தில் அந்த ஆன்மிகக் கேந்திரம் யுத்த கேந்திரமாகவே மாறிப்போனது. சோழர்கள் பொலன்ருவையிலிருந்து இலங்கையில் ஆட்சிபுரிந்தபோது மாதோட்டமும் திருக்கேதீஸ்வரமும் புகழின் உச்சியை அடைந்தன. ராஜராஜேச்சுரம் என்றுகூட மாதிட்டை அழைக்கப்பட்டது. உலகளாவிய வணிகத்திலும் சிறப்பாக இருந்திருக்கிறது என்பதற்கு ஆதாரமாக, பண்டைய உலகின் பல நாடுகளைச் சேர்ந்த நாணயங்களும் போசலின் பாண்டங்களும் மற்றும் பல வணிகப் பொருள்களும் அகழ்வாய்வுகள் மூலம் இப்பகுதியில் அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

மன்னார் தீவுக்கு அமைக்கப்பட்ட சாலைப் பாலமும் ரயில்வே பாலமும் கடல் நீரோட்டத்தை முற்றிலுமாக நிறுத்தியிருக்க வேண்டும். அதன்பின் மாதோட்டத்திற்குப் பதிலாக தலைமன்னார் இந்தியாவுக்கு அருகாமையான துறைமுகமாக உருப்பெற்றது. ஏழாம் நூற்றாண்டுக்குப்பின் தலைநகர் இலங்கையின் கிழக்குக் கரைக்கு அருகிலிருந்த பொலநறுவைக்கு மாற்றப்பட்டதும் ஒரு காரணமாக இருக்கலாம். பராக்கிரமபாகு மன்னன் காலத்தில் துவங்கி போர்ச்சுகீசியரின் வருகைக்குப்பின் மாதோட்ட துறைமுகத்தின் சிறப்புக்குன்றி, வடக்கிலிருக்கும் கேட்ஸ் துறைமுகம் சிறப்புப் பெற்றது. நாளடைவில் மாதோட்டம் தனது முக்கியத்துவத்தை முற்றாக இழந்தது.

இன்றைய மன்னார் பகுதி மாதோட்டத்தை உள்வாங்கிய பகுதியே. பாலாவி ஆறு பரந்து பாயும் நிலை தடுக்கப்பட்டு, பெருங்குளமாக மாறியுள்ளது. ஈழ நாட்டின் மிக உயர்ந்த நிலையில், ஈழத்தின் கலாச்சாரத்தைக் கடல் கடந்து பரப்பிய மாதோட்டம் இன்று புதைபொருள் ஆய்வின் மையமாகியுள்ளது. சீனாவின் சிச்சுவான் பல்கலைக்கழகத்தின் தொல்லியல் ஆய்வாளர்கள் மற்றும் களணி பல்கலைக்கழகத்தின் தொல்லியல்துறை ஆராய்ச்சி பிரிவு இணைந்து மன்னார் மாதோட்டத்தின் வரலாற்று பழமைமிக்க துறைமுகத்தில் விசேட ஆய்வுகள் நடத்தவுள்ளனர் என்கிறார் தொல்லியல்துறை திணைக்களம் பணிப்பாளர் பேராசிரியர் பீபி மண்டாவல. பார்க்கலாம், இந்த ஆய்வுகள் இன்னும் எத்தனையெத்தனை வியப்புகளை, தமிழர் வாழ்வியலின் அதிசயங்களை, தமிழரின் பண்பாட்டுப் பெருமைகளை உலகிற்கு பறைசாற்றப்போகுதென்று!


குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City
கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது kmஇல் 800 m தூரத்தில்
பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு
15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!
சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி
கறுவா, மிளகு ஆகிய பயிர்ச்செய்கையும் பராமரிப்பும்
அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்
தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்
Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park
அருகில் உள்ள நகரங்கள்
Haputala 16km
Diyatalawa 24km
Bandaralawela 27km
Badulla 55km
Nuwara Eliya 58km
Hatton 98km
Hambantota 108km
Pottuvil 129km
Kandy 142km
Colombo 190km
Batticaloa 199km
அருகில் உள்ள விமான நிலையம்
Mattala 84km
Bandaranayake 190km
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd
தொடர்புகளுக்கு: 0777 43 5557


JRIDE
இலங்கையின் பயணிகள் செயலி
SRI LANKA'S
TAXI APP FROM JAFFNA
5%
இப்போது நாம்
இலங்கை முழுவதும்
காத்திருப்புக்கு விடுதலை!
www.jride.lk
மகிழ்ச்சியான பாதுகாப்பான பயணம் திருப்தியான கட்டணம்!